**DINAMANI 24.01.2025**

# கோவையில் வனப் பரப்பு பாதுகாப்பு ஆலோசனை: மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் பங்கேற்பு

**கோவை, ஜன. 23:** வன நிலப்பரப்பு பாதுகாப்பு தொடர்பாக மக்களவை நிலைக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் கோவையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கோவை -தடாகம் சாலையில் உள்ள வனப் பணிக்கான மத்திய உயர் பயிற்சியகம், வன மரபியல் மற்றும் மரம் வளர்ப்பு நிறுவன வளாகத்தில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டுத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மத்திய சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் கீர்த்திவர்தன் சிங் மற்றும் தமிழச்சி தங்கப்பாண்டியன் உள்ளிட்ட மக்களவை நிலைக் குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் மத்திய, மாநில வனத் துறை உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில், வனப் பணிக்கான உயர் பயிற்சியக வளாகத்தில் உள்ள வன உயிரின அருங்காட்சியகத்தை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பார்வையிட்டு, பயிற்சியக வளாகத்தில் 'தாயின் பெயரில் ஒரு மரம்' எனும் திட்டத்தின்கீழ் தனது தாயின் பெயரில் மரக்கன்றை நட்டுவைத்தார்.



கோவை வன உயிரின அருங்காட்சியகத்தை பார்வையிட்ட மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டுத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், இணை அமைச்சர் கீர்த்திவர்தன் சிங் உள்ளிட்டோர்.

தொடர்ந்து, மத்திய அமைச்சர் தலைமையில் மக்களவை நிலைக் குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், வன நிலப்பரப்பு பாதுகாப்பு தொடர்பான திட்டங்களின் நிலை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது, வனப் பரப்பை மேம்படுத்தவும், சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிக்கவும் 2022-2024-ஆம் ஆண்டுகளுக்கிடையே மாற்றுக் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையமான 'கேம்பா' திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை குழு உறுப்பினர்கள் பாராட்டினர். அத்துடன் 'கேம்பா' திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் அவர்கள் வழங்கினர்.

தொடர்ந்து, 'கேம்பா' மேற்கொண்ட பணிகளை விளக்கும் வகையில் கேம்பா 2022-24 'வெற்றிக்கதைகள் ஒரு பார்வை' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

இதையடுத்து, வன மரபியல் மற்றும் மரம் வளர்ப்பு நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களை அமைச்சர் பூபேந்திர யாதவ் திறந்துவைத்து பார்வையிட்டார்.